**OS NO.6/2021** **Date: 21.04.2025**

சீனிவாசன் (DW1)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என் தந்தை 2017ல் காலமானார். என் தகப்பனார் இறக்கும் வரை எல்லோரும் கூட்டு குடும்பமாக இருந்தோமா என்றால் இல்லை, தனியாக தான் இருந்தோம். தாவா சொத்தான சிங்கபெருமாள் கோவில் தெருவில் தெற்கு மாட வீதியில் உள்ள சொத்தானது பூர்வீக சொத்து என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்து என் தகப்பனார் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தை ரூ.1,500க்கு கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். என் அப்பா உயிரோடு இருக்கும் வரை பூர்வீக மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்து வைக்கவில்லை என்றால் சரிதான். என் குடும்ப தொழில் பட்டு தொழில் என்றால் சரிதான். அதனை நாங்கள் 4 தலைமுறையாக செய்து வருகிறோம். பட்டு மற்றும் தறி தொழில் தவிற குடும்பத்திற்கு வேறு தொழில் இல்லை என்றால் சரிதான். பட்டுதறி தொழில் என் குடும்பத்தில் உள்ள ஆண் மற்றும் பெண் ஆகிய அனைவரும் ஈடுபட்டுள்ளனர் என்றால் ஆண்கள் செய்வார்கள், பெண்கள் கூட ஒத்துழைப்பார்கள். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இறந்த என் தம்பி மணி 9ம் வகுப்பு வரை படித்துள்ளார். குடும்பத்தில் உள்ள நபர்கள் பட்டு தொழிலில் இருந்து வந்ததால் யாரும் அதிகம் படிக்கவில்லை என்றால் சரிதான். 4ம் வாதி பட்டு தறி நெய்வாரா என்றால் இல்லை. 4ம் வாதியின் கணவர் பெயர் சீனிவாசன் என்றால் சரிதான். என் சகோதிரிக்கு திருமணம் ஆன சில ஆண்டுகளிலே அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சீனிவாசனுக்கும் தொழில் பட்டுதறி தொழில் என்றால் சரதான். அவர் கூட்டுறவு கைத்தறி சங்கத்தில் உறுப்பினராக இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. அவர் விட்டு சென்ற பட்டுதறி தொழிலை என் சகோதரியான 4ம் வாதி செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. திருமணம் ஆன பிறகும் அவருடைய கணவர் இறந்த பிறகும் என் சகோதரி அவருடைய சொந்த உழைப்பில் தான் இருந்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்க தெரியாது. நானோ, என் தகப்பனாரோ, இறந்து போன எனது தம்பியோ என் சகோதரிக்கு அவருடைய கணவர் இறந்த பிறகு ஏதாவது பண உதவி செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என் தம்பி மணியின் மனைவி தான்

இந்த வழக்கில் 1ம் வாதி என்றால் சரிதான். திருமணம் ஆன பிறகும் 1ம் வாதி பட்டுதறி தொழிலில் உதவியாக இருந்தாரா என்றால் இல்லை. 1ம் வாதியின் கணவர் இறந்த பிறகு அவர் ஜவுளி கடையில் வேலை செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது குடும்ப சொத்து இரண்டு பகுதியாக உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தின் கதவு எண்கள் 8ஏ, 8சி என்றால் சரிதான். நடுவில் உள்ள சொத்து என் பங்காளிகளின் சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தின் கதவு எண்.8பி என்றால் சரிதான். மேற்படி 8ஏ, 8பி, 8சி ஆகிய சொத்துக்களுக்கு பொது நாரா சந்து உள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினையின் போது அவருக்குண்டான சொத்தானது கதவு எண்.8ஏ வீடாகவும், கதவு எண்.8சி புழக்கடை பதியாகவும் இருந்தது. புழக்கடை பகுதி காலி மனையாக உள்ளது. தற்போது கதவு எண்.8சி–ல் கட்டிடம் உள்ளது. மேற்படி கட்டிடமானது பாகப்பிரிவினைக்கு பின்பு கட்டப்பட்டது. என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போது என் தகப்பனார் தலைமையில் என் சகோதரி மற்றும் சகோதரர் திருமணங்கள் நடைப்பெற்றது என்றால் சரிதான். பொதுவாக எங்கள் சமுதாயத்தில் திருமண செலவுகளை மாப்பிள்ளை வீட்டாரே செய்வது வழக்கம் என்றால் சரிதான். என் சகோதரியின் திருமண செலவுகளை அவருடைய மாமனார் செய்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் வயது முதிர்வின் காரணமாக காலமானார் என்றால் சரிதான். என் தகப்பனார் இறக்கும் வரை குடும்பத்தை அவரே பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் உயிருடன் இருக்கும் காலத்தில் குடும்பத்தை நான் பராமரித்து வந்தேன் என்பதை காட்ட எழுத்து மூலமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. தற்போது கதவு எண்.8ஏ–ஐ பொறுத்து பழுது ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் குடியிருக்க முடியாது என்பதற்காக 1 முதல் 3 வாதிகள் கதவு எண்.12ஏ–க்கு குடிபெயர்தார்கள் என்றால் சரிதான். கதவு எண்.8ஏ–க்கான வரிவிதிப்பு தொகையை வாதிகள் செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த வரி விதிப்பு என் தகப்பனார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். கதவு எண்.8சி–க்கு வரி விதிப்பானது என் தகப்பனார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். கதவு எண்.8சி–க்கு நான் வரி கட்டி வருகிறேன். நான் பூர்வீக வீட்டை 6 முறை சின்ன காஞ்சிபுரம் கூட்டுறவு நகர்புற வங்கியில் வைத்து கடன் வாங்கியுள்ளேன் என்றும் அதற்குரிய ஆவணம் வா.சா.ஆ.2 முதல் 7 வரை என்றும் சொன்னால் சரிதான். மேற்படி சொத்தை

நான், குமாரசாமி, மணி ஆகியோர் சேர்ந்து அடமானம் செய்துள்ளோம் என்றால் சரிதான். கடன் வாங்கியதற்கான காரணம் பற்றி பத்திரத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை பூர்வீக வீட்டிலும் அதை தவிர்த்து வாடகை எடுத்தும் பட்டு தறி போட்டு வந்தோம் என்றால் சரிதான். தறி தொழில் அபிவிருத்திக்கு தான் 6 முறை கடன் வாங்கினேன் என்றால் சரிதான். வங்கியில் கடன் வாங்கி தான் என் தம்பியின் கடனையும் என் சகோதரியின் கடனையும் அடைத்தேன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. கதவு எண்.8சி–ல் உள்ள வீடானது கூட்டுக்குடும்ப வருமானத்தை வைத்து கட்டப்பட்டது என்றால் சரியல்ல. எந்த ஆண்டு வீடு கட்டப்பட்டது என்பதை காட்ட வரைபடம் ஒப்புதல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1992ல் மேற்படி வீடு கட்டப்பட்டது. நான் கடைசியாக சின்ன காஞ்சிபுரம் கூட்டுறவு நகர்புற வங்கியில் ரூ–20,000 கடன் பெற்றேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு ரூ.5,000 அளவில் கடன் பெற்றுள்ளேன். நான் அதிக அளவில் கடன் வாங்கி மேற்படி தொகையில் வீடு கட்டினேன் என்றால் சரிதான். கடைசியாக வாங்கிய கடனை என் தகப்பனார் இருக்கும் போதே திருப்பி செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். அந்த கடனுக்குரிய வங்கி புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த கடனையும் குடும்ப வருவாய் கொண்டு தான் திருப்பி செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் சொந்த வருமானத்தை வைத்து கடனை திருப்பி கட்டினேன். நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் நானும் என் தகப்பனாரும் சேர்ந்து செலுத்தியதாக கூறியுள்ளேன், ஆனால் அவர் வேலை செய்யவில்லை. நான் கதவு எண்.8சி–ல் குடியிருக்கிறேன். என் தகப்பானர் 8ஏ–ல் உள்ள வீட்டில் தான் காலமானார் என்றால் சரிதான். கதவு எண்.8ஏ வீடு 2019ல் தான் பழுதடைந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பின்பக்கம் இருக்கும் வீட்டில் குடியிருக்கும் நிலையில் முன் பக்கம் உள்ள வீடு என்ன ஆனது என்று எனக்கு தெரியாதா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.34 ஆவணம் வீடு கட்டும் போது வாங்கிய சாமன்களின் பில் ரசீது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் புள்ளி தான் உள்ளதே தவிற பணம் பெற்றுக்கொண்டதற்கான ரசீது இல்லை என்றால் சரிதான். அதில் பணம் பெற்றுக்கொண்டதற்கான கடை உரிமையாளரின் கையொப்பம் இல்லை. ரசீது உள்ளது. நான் வீடு 1992ல் கட்டினேன் என்றும்

பி.வா.சா.ஆ.34ல் 21.08.2014 அன்று ஒரு பில் ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் வழக்கிற்காக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள். நான் அதற்கு பதில் ஏதும் அனுப்பவில்லை. தாவா இரண்டு அயிட்ட சொத்துக்களும் பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் அது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 1 முதல் 3 வாதிகளுக்கு 1/3 பாகமும் 4ம் வாதிக்கு 1/3 பாகமும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. மூதாதையர் சொத்தில் பங்கு கொடுக்கிறேன். என் சொந்த சொத்தில் பங்கு கொடுக்க முடியாது. நான் கதவு எண்.8ஏ மற்றும் 8சி–ல் 1/3ல் ஒரு பங்கு நான் கொடுக்க தயாராக உள்ளேன். ஓரிக்கையில் உள்ள காலி மனையில் வாதிகளுக்கு உரிமை இல்லை. ஓரிக்கையில் உள்ள காலி மனை எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் அந்த சொத்தும் கூட்டு குடும்ப சொத்து என்றால் சரியல்ல. தாவா வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றும் நான் வீணாக வழக்கு நடத்துகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)